# இரேகையில் சித்திரம்

**வரைதற் பயிற்சி**

**தரம் – 6 – 11**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா / மாதகல் சென் யோசவ் ம.வி.

ஆசிரியர் : திரு.பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரேகையில் சித்திரம்

# தரம் 6 – 11 வரை

ஆசிரியர் : திரு.பா.இரமணாகரன் (கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சித்திரம்)
யா / மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயம்.
யா / மாதகல் நுணசை வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இரேகையில் சித்திரம் |
| ஆசிரியர் | : | திரு.பா.இரமணாகரன் |
| வெளியீடு | : | 2016 |
| உரிமை | : | நூலாசிரியருக்கே |
| பக்கங்கள் | : | 60 |
| பிரதிகள் | : | 500 |
| பக்க வடிவமைப்பு | : | தி.ஸர்வேஸ்வரன் |
| அச்சிட்டோர் | : | வானவில் பதிப்பகம், மாதகல். |
| விலை | : | **200/=** |
| ISBN | : | 978-955-43539-0-9 |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



உணர்வாலும் உதிரத்தாலும் இணைந்த அன்னைக்கு இந்நூல் சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



இன்று கவின்கலை துறையில் பல நூல்கள் வெளிவந்தாலும் அவை மிக அருகியே காணப்படுகின்றன. கலையை வளர்ப்பவர்களும் மிகச் சிலரே அந்த வகையில் எமது பாடசாலை ஆசிரியர் திரு.பா.இரமணாகரன் அவர்களின் முயற்சியில் விளைந்த முத்தே இச் சித்திரக்கலைப் பயிற்சி நூல் இந்நூல் மாணவர்களின் கலை வளர்ச்சிக்கு ஓர் அரிய வரப்பிரசாதமாகும். சித்திரக்கலை மாணவரின் உளம் தூய்மை பெற வழிவகுக்கும் ஒரு ஊடகமாகும். இவ் அளப்பரிய சேவை புரிந்த ஆசிரியரைப் பாராட்டுகின்றேன்.

இவ் ஆசிரியரின் வெளியீடு எமது பாடசாலையில் வெளியிடுவதையிட்டு புளங்காங்கிதம் அடைவதுடன் அவரது பணி மேன் மேலும் வளர இறையருளுடன் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்

**J.E.பங்கிராஸ்.**

**அதிபர்,**

யா / மாதகல் சென் யோசவ் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



திரு.பா.இரமணாகரனின் "இரேகையில் சித்திரம்" எனும் நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் சித்திரக்கலையும் ஒன்றாகும். தமிழர் வாழ்வில் சங்க காலம் தொட்டு இன்று வரை சித்திரக்கலை முதன்மை பெற்று இருந்ததனை காணக்கூடியதாகவுள்ளது. உலகில் பிரபல்யமான ஓவியமாக லியனாடோ டாவின்சீயின் ஓவியங்கள், ரவிவர்மாவின் ஓவியங்கள் என்பன குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில் திரு.பா.இரமணாகரன் ஆசிரியர் அவர்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் சித்திர பாடத்தை விருப்புடன் கற்று யாழ் தேசிய கல்வியற் கல்லூரியில் ஆசிரியராகப் பயிற்சி பெற்று இன்று யாழ் குடா நாட்டிலுள்ள சிறந்த சித்திர ஆசிரியர்களில் ஒருவராக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. அவரது சித்திரக்கலை தொடர்பான காட்சிகள், சமூக நிகழ்வுகள், என்பவற்றை இரேகையில் சித்திரம் எனும் நூலில் அனைவரது கருத்தையும் கவரக்கூடிய காணக்கூடியதாகவுள்ளது. இந்நூலை எமது பாடசாலை மாணவர்கள் அனைவரும் ஒருமித்த ஆர்வத்துடன் இரசித்து படிப்பதை காணக் கூடியதாக உள்ளது. இந்நூலாசிரியர் திரு.பா.இரமணாகரன் அவர்களுடன் நீண்ட காலப் பழக்கம் எனக்குண்டு. அவர் எமது பாடசாலையில் கடந்த நான்கு மாதங்களாக பகுதி நேர சித்திரபாட ஆசிரியராக கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கதாகும். அவரின் வருகையின் பின் எமது பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் சித்திர பாடத்தை கற்று வருவது எதிர்வரும் காலங்களில் நடைபெறும் பொதுப் பரீட்சையில் சித்திர பாடத்தில் 100 வீத சித்தி பெறுவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

சித்திரபாட ஆலோசகர் திரு.செ.வரதராஜன் அவர்களை அழைத்து வந்து எமது கல்லூரியின் முகப்பு மதிலில் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அழகு படுத்தும் அவரது ஓவியங்கள் தன்னிலை அற்ற சேவைக்கு ஓர் உதாரணமாகும். அவர் ஒரு சேவைப்பற்றும், படைப்பாற்றலும், வெளியீட்டுத்துறையில் உள்ள ஆர்வமும் அவர் மேலும் மேலும் சாதனைகள் படைத்து வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

நன்றி

**திரு.க.சிவநேசன்,**

**அதிபர்,**

யா/மாதகல் நுணசை வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திரு.பா.இரமணாகரன் எனது விருப்பத்திற்குரிய நல் மாணவனாக 1994 இல் யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் திகழ்ந்தவர். இக்காலத்திலே இவர் சித்திரக் கலையில் திறன் மிக்கவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது மூத்த சகோதரரும் ஓர் சித்திர பாட ஆசிரியராவார். திரு.பா.இரமணாகரன் யாழ் தேசிய கல்வியற் கல்லூரியில் சித்திர பாட கற்கை நெறியைப் பூர்த்தி செய்து 2006 இல் சித்திர பாடத்திற்கான வினாவிடை நூல் ஆக்கி வெளியிட்டார். சித்திர பாட நூல்கள் அதிகம் இல்லாத காலத்தில் இவரது இந்நூல் மாணவர்களுக்கு பெரிதும் துணை செய்தது.

இந்நூல் தொடர்பாக யா/நவாலி மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்த போது எமது வேண்டுகோளுக்கு அமைவாக நவாலி மகா வித்தியாலய முன்றலில் மகாத்மா காந்தியையும் தீயவற்றைப் பார்க்காதே, தீயவற்றைக் கேட்காதே, தீயவற்றைப் பேசாதே என்ற கருத்துச் சித்திரத்தையும் ஓயவியமாக சிறப்பாக வரைந்து தந்தார். இவ் ஓவியம் இன்று வரை நிலைத்து அனைவரையும் மகிழ்விக்கின்றது.

2015 இல் இரமணாகரன் காரைநகர் சுத்தரமூர்த்தி நாயனார், யா/ஊர்காவற்துறை புனித மரியாள் றோ.க. வித்தியாலயம் ஆகியவற்றில் பகுதி நேரமாக கடமையாற்றினார். இக் காலத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் மாணவர்களின் நலன் கருதி கவனிப்பார் அற்று இருந்த ஓர் சிறிய கட்டிடத்தை சீர் செய்து அதனை சித்திர அறையாக வடிவமைத்து மாணவர்களின் ஓவியங்களை காட்சிப்படுத்தி வித்தியாலயத்தில சித்திரக் கலையில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தினார்.

இவர், சித்திர அறையின் வெளிச் சுவரிலும் மாணவர் மூலமாக ஓவியங்களை வடிவமைத்து சிறப்புச் சேர்த்தார். இக் காலத்தில் 6 – 11 வரை பாடத்திட்டத்திற்கு அமைவாக சித்திரக் கலை வரைதற் பயிற்சி செயல் நூலை தீவக வலய கல்வி திணைக்களத்தின் அனுமதியுடன் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி மாணவர் திறன்விருத்திக்கும் ஆர்வத்துடன் செயற்படவும் உந்து சக்தியாக செயற்பட்டார் இவர் 2014, 2015 காலப்பகுதியில் காரைநகர் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் கோட்ட மட்ட சித்திர பாட வளவாளராகவும் செயற்பட்டார்.

இவர் மேலும் பல ஆக்கங்களை வெளியிட்டு மாணவரின் சித்திரக்கலை பாடத்திறனை மேம்படுத்த இறை பாதம் பணிந்து வாழ்த்துகின்றேன்.

நன்றி

**பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன்,**
கோட்டக்கல்வி அதிகாரி (ஓய்வுநிலை),
கல்விக் கோட்டம்,
காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் இன்றைய சூழ் நிலையில் கலைத்திட்டத்திற்கு அமைய தொகுதி II இல் வகை செய்யப்பட்டுள்ள பாடங்களில் சித்திர பாடம் இன்றியமையாத பாடமாக விளங்குகிறது. சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம், தமிழ் இலக்கியம், நுன்கலை பாடங்களில் அணிசெய்கின்ற நிலையில் வலயமட்ட வீதக் கணிப்பீட்டில் இவற்றில் ஏதேனும் பாடத்தில் குறை ஏற்படும் இடத்து அது தொகுதி பாடத்தின் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்தும்.

சித்திரமென்றால் உலகில் உள்ள அசையும் அசையாப் பொருட்கள், உயிர் உள்ள, உயிர் அற்ற பொருட்கள் என்பவற்றை பார்த்தோ பார்த்ததை நினைவில் வைத்தோ உயிர் ஓட்டமாக வரைதலைக் குறிக்கும் நிலையில் இன்றைய மாணவர்கள் செயன் முறைச் செயற்பாட்டிலுள்ள மனித, மிருக காட்சி அமைப்பை ஒருங்கிணைத்து வரைவதில் சிக்கலை எதிர் நோக்குகின்றனர் என்பதை உணர்ந்து மாணவர்களது நலன் கருதி திரு.பா.இரமணாகரன் ஆசிரியர் அவர்கள் வரைந்துள்ள இரேகையில் சித்திரம் என்ற நூல் வெளிவருவது மிகவும் போற்றுதற்குரியது.

இதுவரையில் பல்வேறு நூல்கள் சித்திரம் தொடர்பாக வெளிவந்துள்ளது. இருந்தும் அவை சித்திர அறிமுறை தொடர்பானது. செயன்முறை செயற்பாட்டு நூல்கள் வரிசையில் இதற்கு முன்வந்த படைப்புக்கள் இப்பிரதேசத்தில் பெற்றுக் கொள்ள முடியாமையும் பின்தங்கிய மாணவர்களுக்கு சென்றடைவதில் உள்ள குறைபாடுகளை இனங்கண்டு பாடத்திட்டத்திலுள்ள கலைத்திட்ட முறைமைக்கு அமைவாக இரேகை மூலம் திரு.பா.இரமணாகரன் அவர்கள் உருவாக்கியுள்ள படைப்பு ஒவ்வொரு தேரச்சிக்குமுரிய காட்சி அமைப்புக்கள் மாணவர்களை இலகுவாக கவரும் நிலையும் வரையும் தன்மையும் அதற்கு வர்ணம் தீட்டிப்பழகவும் மாணவரைத் தூண்டுவதோடு பாடசாலையில் உரிய காலத்தில் செய்து முடிக்காத செயல்முறைச் செயற்பாட்டை வீட்டிற்கு சென்று அவர்களுடைய சூழ்நிலைக்கு அமைவாக பயிற்சி செய்யவும் உதவுகிறது.

நம்மவரில் பலர் சிறந்த சித்திரக்கலை வல்லுநர்களாக இருந்த போதும் தாம் பெற்ற அறிவினை நூல் வடிவில் ஆக்கித் தந்து தமது எதிர்காலச் சந்ததிக்கு உதவி செய்யத் தவறியுள்ளனர். இந்நிலையில் சித்திரப்பற்றுடனும் நாட்டுப் பற்றுடனும் இந்நூல் வெளியிடப்படுவது கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர பாடத்தில் தகுந்த நூல்கள் இருந்தும் அவை கஸ்ரப்பிரதேச, அதிகஸ்ரப் பிரதேச பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு கிடைப்பதில்லை. இப்பிரச்சனைக்கு தீர்வாக இந்நூலாசிரியர் யா/காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயயம், யா/ஊரகாவற்துறை புனித வித்தியாலயம் போன்ற தீவக வலயப் பாடசாலைகளில் இவ்வாறான சித்திர பயிற்சி நூலை தீவக வலய உதவியுடன் மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாக சென்றடைய உதவியதோடு தற்போது யா/மாதகல் நுணசை வித்தியாலத்தில் உள்ள மாணவர்களுக்கும் இலவசமாக நிழல் பிரதிகள் செய்து அதிபரின் உதவியுடன் வழங்கியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்களிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. மேலும் நிரந்தர பாடசாலையாக் யா/சென் யோசப் மகா வித்தியாலயத்தில் சித்திர பாட ஆசிரியராக கடமையாற்றிவரும் நிலையில் பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் மாணவர்களின் கலை வளர்ச்சியில் பங்குபற்றுகின்றார் என்பதை அறிய முடிகிறது.

யாழ் தேசிய கல்வியற் கல்லூரியில் சித்திர பாட பயிற்சி நெறியினை முடித்து கற்பித்தலில் தேசிய டிப்ளோமா என்னும் தொழிற் தகைமையினை பெற்றுள்ள இவர் உள்ளகப் பயிற்சிக்காலத்தில் 2005 ஆம் ஆண்டு ஒரு வருட பயிற்சிக்காக யா/ வட்டு இந்துக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் தனது சித்திர பாட செயற்றிட்டத்தின் மூலம் சித்திர பாடத்திற்குரிய அறையை, கற்பித்தல் சாதனங்களை மாணவர்களுடன் இணைந்து வரைந்து ஒரு கலைக் கூடமாக மாற்றியுள்ளதோடு இப் பாடசாலை பதிவின் ஊடாக சித்திர வினாவிடைப் புத்தகமும் வெளியீடு செய்துள்ளார்.

இவை தவிர யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலையில் சித்திர வகுப்பறையை அலங்கரிப்பு செய்ததோடு சித்திர பாடத்தில் சித்தி வீதம் நூறைப் பெற்றுக் கொடுத்து பாடசாலை வளர்ச்சிக்கு உதவியமை தெரிந்ததே.

இந்நூலுக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் ஆதரவு கொடுப்பார்கள் என்றும் அதன் மூலம் திரு.பா.இரமணாகரன் அவர்களை மேலும் பல நூல்களை எழுத தூண்டுவார்கள். இந்நூலாசிரியர் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

நன்றி

**திருமதி.ஜெ.அருள்மயம்,**
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்விப் பணிமனை,
வலிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சித்திரக்கலையானது அரியதோர் கலை. தரம் 6 தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் வரை சித்திர பாடத்தை கற்கும் மாணவர்கள் அலங்காரம், கருத்து வெளிப்பாடு ஆகிய பகுதிகளை கற்க வேண்டியுள்ளது. ஆனாலும் பெரும்பாலான மாணவர்கள் அலங்காரத்தையே தெரிவு செய்கின்றனர்.

இம் மாணவர்கள் கருத்து வெளிப்பாட்டை தெரிவு செய்வதற்கு உந்து சக்தியாக அமைகின்றது. ஆசிரியர் திரு.பா.இரமணாகரன் அவர்களின் இந்நூல் ஊடாக மாணவர்கள் கருத்து வெளிப்பாட்டு சித்திரத்தில் போதிய தேர்ச்சியைப் பெறுவார்கள். இவ்வாசிரியரின் முயற்சி வரவேற்கக்கூடியதுடன், இம்முயற்சி தொடரவும் இவ்வாசிரியரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

**திருமதி.ம.இளமுருகன்,**

ஆசிரிய ஆலோசகர்,

வலிகாமம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சித்திரம் ஒரு புனிதமான கலை. ஆம் மனதின் உணர்வுகளுக்கு பிரபாகங்களை வெளியிடும் ஒரு அரிய கலை. ஆயகலைகள் அறுபத்து நான்கிலும். மிக இலகுவாக எல்லோருடைய உள்ளங்களிலும் இடம் பிடிக்கக் கூடிய உயர்வான கலை. கிறுக்கல், கோடுகள், வட்டங்கள் என ஆரம்பித்து பல பரிமானங்களிலும் முழுமையான உணர்வுகளை வெளிக்காட்டுவது இக்கலையாகும். சிறு குழந்தை முதல் முதியோர் வரை தமக்குத் தெரிந்தோ தெரியாமலோ இக் கலைக்கூடாக தமது வாழ் நாள் முழுவதும் பயிற்சி எடுக்க எண்ணக்கருக்களை வெளிப்படுத்துவதும் சித்திரக்கலையே!

பாடசாலை மாணவர்களிடையேயும் சித்திரக் கலை பாடமாகப் புகுத்தப்பட்டுள்ளது. பல மாணவர்கள் மிக ஆர்வத்துடன் சித்திரக் கலையை வளர்க்க முயற்சிக்கின்றார்கள் எங்கள் தமிழ் மொழி மாணவர்களைப் பொறுத்த வரை சித்திர பாட பகிரங்கப் பரீட்சை வினாத்தாள்கள் பெரும்பாலும் சிங்கள பௌத்த, கலாசார, வரலாற்றுப் பின்னனியில்தான் தயாரிக்கப்படுகின்றது.

ஆனால் தமிழ் மொழியின் ஊடாக சித்திர பாட அறிவைப் பெருக்க எமது கலை ஆர்வமுள்ள அனைவரும் முனைப்புடன் செயற்பட வேண்டும். கீரிமலை நகுலேஸ்வர சுற்றாடலில் உள்ள சித்திரங்கள் தமிழ் மரபுகளுடன் படைக்கப்பட்டது. இத்தகைய சிறப்புக்களுடன் எம் மாணவர்களிடையே அறிவோடு பரப்ப சித்திரக்கலையில் ஆர்வமும் முனைப்பும் உள்ளவர்கள் முன்வரவேண்டும்.

இன்று வடபகுதியில் பல சித்திரபாட ஆசிரியர்கள் மாணவர்கள் நலன்கருதி சித்திர பாடத்திற்கான துறை நூல்களை ஆக்கித் தந்து கொண்டு இருக்கின்றார்கள். இந்த வகையில் ஆசிரியர் திரு.பா.இரமணாகரன் அவர்கள் தனது இரண்டாவது முயற்சியாக இரேகையில் சித்திரம் எனும் வரைதற் பயிற்சிநூல் தரம் 6 தொடக்கம் - 11 வரைக்கும் ஆக்கி வெளியீடு செய்கின்றார். இது மகிழ்ச்சிக்குரியது. மேற்படி ஆசிரியர் எனது அன்புக்குரிய மாணவன் என்ற வகையில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தருகின்றது.

இதை விட யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரியில் இவரை சித்திர பாடத்தில் நெறிப்படுத்தி வளர்த்தெடுத்த சித்திர பாட கல்வியியலாளரும் கவிஞருமாகிய மானியூர் ரட்னேஸ் அவர்கள் யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் மடியில் வளர்க்கப்பட்ட பெருமைக்குரிய எனது அன்பு மாணவன் என்னும் போது இவ்விரட்டிப்பு மகிழ்ச்சியை இன்னமும் அடைகின்றேன்.

இந்நூலின் பாடப் பயிற்சியோடு திரு.பா.இரமணாகரன் சித்திரத்தின் ஊடாக கவிதையும், கவிதையின் ஊடாக சித்திரத்தையும் படம் பிடித்துக் காட்டும் திறமை உடையவர். இவரது சித்திரக்கலைப் படைப்புக்களும் சரி, கவிதை கலைப் படைப்புக்களும் சரி கன்னிப் படைப்பு நிலையில் இருந்து இளவல் நிலைக்கு வளர்ந்துள்ளதை இந் நூலின் மூலம் காண்கின்றேன்.

மண்ணின் தாகத்திற்கு ஏற்பவும் சமூகப் பொறுப்போடும் சுயநலமற்ற பொது நலத்தோடு படைத்திருப்பதை நாம் காணலாம். இவரது இப் பாரிய கைங்கரியத்திற்கு எதிர்கால சந்ததியான மாணவச் செல்வங்களும் வழிகாட்டும் நல் ஆசான்களும் என் இனத்தின் மீது மதிப்பும், பற்றும் கொண்ட அனைத்து உள்ளங்களும் தமது முழுமையான ஒத்தாசைகளையும், பங்களிப்புக்களையும் வழங்குவது கடமையாகும். ஏனெனில் எம்மினம் வேண்டிநிற்கும் பல்வேறு விடயங்களில் இவரது ஆக்கப்படைப்புக்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டியவைகளாக உள்ளதை உணர்கின்றேன்.

இவரது முயற்சிகள் மேலும் தொடர்ந்து வளர எல்லாம் வல்ல இறைவனின் ஆசியுடன் கூடிய என் நல்வாழ்த்துக்கள்.

நன்றி

**திரு.அ.மு.அருணாசலம்,**
ஓய்வு நிலை அதிபர் தரம் I,
யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
மு / யோகபுரம் மகாவித்தியாலயம், மல்லாவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையின் சித்திர பாட ஆசிரியர் திரு.பா.இரமணாகரன் அவர்கள் பாடம் சார் ஆழ்ந்த புலமையும் பரந்த சமூக தூர நோக்கமும், அழகியல் சார் உணர்வும் உயர்வாகவே கொண்டவர். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் இடையறாத அக்கறை கொண்ட ஆசிரியர். சித்திர பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்பதை ஊக்குவிப்பவர்.

அழகியல் உணர்வே மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும் வளர்த்தெடுக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். ஆசிரியரின் அர்ப்பணிப்புள்ள சேவையின் செயற்பாடாக தரம் 6 – 11 வரை இரேகையில் சித்திரப் பயிற்சி நூல் அமைந்திருக்கின்றது. இவரது முயற்சி தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் நிற்பாராக.

நன்றி

**திரு.கு.விக்னரூபன்,**
உப அதிபர்,
யா / மாதகல் சென் யோசப் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



யாழ் குடா நாட்டில் சித்திர பாடத்துறையில் மாணவர்களின் அடைவு மட்டம் சற்று வீழ்ச்சி அடைந்துள்ளமையினால் மாணவர்களை வளர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவர்களின் சித்திரக் கலைத்திறனை மேலும் மேலும் வளர்க்கும் நோக்கில் திரு.பா.இரமணாகரன் அவர்கள் பல சிறப்பம்சங்களை உள்ளடக்கிய இரேகையில் சித்திரம் எனும் நூலை அமைத்துள்ளார்.

எண்ணக்கருவில் தோன்றுகின்ற வடிவங்களை உருவமைப்பது சித்திரக்கலையாகும். ஆனால் இக் கலையில் நுட்பங்கள் அழகுத் தோற்றங்களை வரையும் திறன் யாழ் குடாநாட்டில் மாணவர்களுக்கு குறைவாகவே உள்ளது. இத் திறனை மாணவர்களிடம் வளர்ப்பதற்கு சித்திரக் கலைஞர்களும் பல வழிகளிலும் முயற்சி எடுத்துள்ளனர். எனினும் காட்சி அமைப்புத் தொடர்பான வரை திறன் முயற்சி அரிதாகவே உள்ளது.

இந்நிலையில் இந்நூலில் வருகின்ற சித்திரக் காட்சிகள் பாடத்திட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாக உள்ளன.

திரு.பா.இரமணாகரன் அவர்கள் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா தகைமை பெற்ற சித்திர ஆசிரியராக பத்து வருட சேவையினை ஆற்றிய அனுபவம் உள்ளது. இவர் கடமையாற்றிய பாடசாலைகளில் சித்திரக் கலையில் மாணவர்களின் அடைவு மட்டம் 80 – 100 வீதம் வரையில் உயர்ந்தே காணப்படுகின்றது.

சிறந்த ஓவியம் அமைப்பது சுலபம். ஆனால் அவற்றை திறம்பட அமைப்பதற்கான வழி முறைகளை, நுட்பங்களை விளங்கப்படுத்துவது, சொல்லிக் கொடுப்பது மிக மிக கஸ்ரம்.

இந்நூலை அமைத்தவர் எல்லா வழிமுறைகளையும் நுட்பங்களையும் இலகுவாக கையாண்ட விதம் மேலும் சிறந்த முன்னுதாரணமாக உள்ளது. மாணவர்களுக்கு இயல்பாகவே சித்திரக்கலையை கற்பதில் ஆர்வம் ஏற்படுதல் வேண்டும். இந்நூலாசிரியர் கையாண்ட உத்திகள் மாணவர்களை கலைச் செயற்பாட்டில் ஊக்கமுடையவர்களாக ஆக்கியுள்ளன.

இந்நூலாசிரியர் நாட்டுப்பற்றுடனும் கலைப்பற்றுடனும் அமைத்துள்ளார். தான் பெற்றுக் கொண்ட கலைத்திறனை மற்றவர்களும் அடைய வேண்டும் என்ற நோக்குடன் இந்நூலாசிரியர் செயற்பட்டுள்ளார். இந்நூலானது சித்திரக்கலைத்திறனில் பிந்தியிருக்கும் மாணவர்கள் யாவரையும் செயற்றிறன் உள்ளவர்களாக ஆக்க வழிசெய்துள்ளது.

ஆசிரியர் இல்லாமலே மாணவர்கள் கற்று, வரைந்து, பழகி சிறந்த தேர்ச்சி அடைவதற்கான செயல் நுட்பங்கள் யாவும் இந்நூலில் காட்டப்பட்டுள்ளது. ஆகவே மாணவர்கள் சித்திரக்கலையில் தேர்ச்சி அடைவது நிச்சயம்.

நன்றி

**திரு.செ.வரதராஜன்,**
கலா பூசணம்,
ஓய்வுபெற்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,
சித்திரம்,
யாழ் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



சித்திரக்கலையைப் பொறுத்தவரையில் அறிமுறை சார் விடயங்கள் உள்ளடக்கிய சித்திரக்கலைக் புத்தகங்கள் இன்று தனிப்பட்ட முறையில் வெளியீடு செய்யப்பட்டு புத்தகக் கடைகளில் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. சித்திரபாடத்தில் ஆசிரியர் கைந்நூல்களைத் தவிர அரசேவைகள் மூலம் இலவசமாக எந்த ஒரு நூலும் வெளியீடு செய்யப்படுவதில்லை. மற்றும் தனிப்பட்ட முறையில் சித்திர பாடத்தை கற்கவோ, கற்பிக்கவோ போதிய அளவில் தூண்டப்படுவதும் இல்லை. மாணவர்கள் கலைத்திட்டத்திற்கு அமைவாக பாடசாலையில் மட்டும் சித்திர ஆசிரியரை மட்டும் நம்பி சித்திரம் கற்கும் நிலையில் சித்திர பாட அடைவு மட்டமும் வரைதிறன் கொண்ட மாணவர்களும் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றனர். சித்திரம் வரையத் தெரியாத மாணவர்கூட அறிமுறைகளைக் கற்று தேர்ந்து விட்டு சித்திர வரைதலின் அடிப்படை தெரியாமல் இருந்து தொழில் மற்றும் பதவி நிலைகளை அடைகின்றபோது அது சித்திரபாட கலைச் சமூகத்திற்கு பாரிய சவாலாக உள்ளது.

இவ்வாறான பிரச்சனைகளுக்கு தீர்வாக கற்பிக்கும் பாடசாலைகளில் என்னால் முடிந்தவரையில் வரைதிறனை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு செயற்றிட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு சித்திர வரைதற் பயிற்சி நூல்கள் பல பிரதி செய்து இலவசமாக வழங்கி வரும் நிலையில் இந் நூல் ஆக்கத்தை ஒரு முழுமை பெற்ற சமூக அங்கிகாரத்தோடு முறைப்படி வெளியீடு செய்ய நினைத்து பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் இணைந்து முழு ஆதரவோடு வெளியீடு செய்கின்றேன்.

இந்நூல் தற்பொழுது மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்துக்கு அமைவாக 6 – 11 வரையான கலைத்திட்டத்ததிலுள்ள ஒவ்வொரு தேர்ச்சிக்கும் வரைய வேண்டிய செயல்முறை செயற்பாடுகளுக்கு அமைவாக இயன்றவரையில் காட்சிகளை அமைத்து பாடசாலையில் ஒதுக்கப்பட்ட பாட நேரத்தில் வரைய முடியாத சந்தர்ப்பத்தில், பொழுதுபோக்கான நேரத்தில் அவர்கள் மீளப்பார்த்து வரைந்து முழுமை செய்யும் ஒரு சந்தர்ப்பத்தை இந்நூல் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இந்நூலின் வெளியீட்டினை ஆசிரியர்களும் மாணவர்களும் மனமார ஏற்பார்கள் என நம்புகின்றேன்.

நன்றி

**திரு.பா.இரமணாகரன்,**

சித்திரபாட ஆசிரியர்.

யா/மாதகல் சென். யோசப் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | தொடக்கம் - வரை |
|---|---|
| 1. தரம் 06 | 1-5 |
| 2. தரம் 07 | 6-15 |
| 3. தரம் 08 | 16-23 |
| 4. தரம் 09 | 24-27 |
| 5. தரம் 10 | 28-32 |
| 6. தரம் 11 | 33-38 |
| 7. பொழுதுபோக்கு | 39 |
| 8. வீட்டுக்கு வந்த உறவினர் | 40 |
| 9. முதியோர் அறிவுரை | 41 |
| 10. பொருட் கூட்டம் | 42-43 |
| 11. சிறுவர் அட்டைப் படம் | 44 |
| 12. அலங்காரம் | 45-46 |
| 13. வறுமை | 47 |
| 14. கூசாவிற்கான அலங்காரம் | 48 |
| 15. நவீன பறவை | 49 |
| 16. அலங்காரம் | 50-51 |
| 17. சமய நிகழ்வு | 52-53 |
| 18. அலங்காரம் | 54 |
| 19. உருப் பெருக்கம் | 55 |
| 20. சின்னம் | 56 |
| 21. பொருட் கூட்டம் | 57 |
| 22. விபத்து | 58 |
| 23. பொதிசுற்றும் தாள் | 59 |
| 24. உழவுத் தொழில் | 60 |
| 25. நவீன ஓவியம் | 61 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 6 தவணை – 1 பாடசாலைத் தோட்டம் தேர்ச்சி 1-1-1 செயன்முறை செயற்பாடு




இரேகையில் சித்திரம்



பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 6 தவணை 2 தேர்ச்சி 1 — 1 - 3 மனித உருவத்தின் பல மெய் நிலைகளை இரேகை மூலம் காட்டுவோம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 6 தவணை - 2 தேர்ச்சி 1 -2 – 1 வாசனை மலரும் வண்ணாத்திப் பூச்சியும்






இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 6 தவணை 2 தேர்ச்சி 1 – 2 - 3 சனக் கூட்டம் நிறைந்த கிராமத்துக் கடை





இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 6 தவணை – 3 தேர்ச்சி 1-2-4 சமயச் சடங்குகள்





இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தரம் - 7 தவணை – 1 தேர்ச்சி 1-1-1 மழை நாள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 7 தவணை - 1 தேர்ச்சி 1-1-1 இறங்குதுறை






இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 7 தவணை - 1 தேர்ச்சி 1-1-7 பாடசாலை சிரமதானம்



இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 7 தவணை - 1 தேர்ச்சி 1-1-3 மாட்டு வண்டிக்காரர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 7 தவணை– 2 - அருவி ஆற்றில் நீராடுதல்






இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 7 தவணை – 3 தேர்ச்சி 1-2-1 இல்ல விளையாட்டுப் போட்டி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம – 7 தவணை – 3 தேர்ச்சி 1-2-2 செவ்விளநீர் வியாபாரம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 7 தவணை 3 மல்லுக்கட்டும் ஆடு





பா.இரமணாகரன்

இரேகையில் சித்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 7 தவணை 3 சிரமதானம் செய்யும் மனிதர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 8 தவணை – 2 தேர்ச்சி 1-1-2 சேனைப் பயிர்ச் செய்கை



இரேகையில் சித்திரம்



பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 8 தவணை – 2 தேர்ச்சி 1-1-3 யாத்திரைக்குச் செல்லும் குழுவினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இரேகையில் சித்திரம் பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 8 தவணை - 1 கற்பனை தலைப்பு பாட்டி நடந்துவருதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 8 தவணை - 3 தேர்ச்சி 1-2-1 சமயத்துடன் தொடர்புடைய நிகழ்வு






இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 8 தவணை – 3 தேர்ச்சி 1-2-2 துக்ககரமான நிகழ்வு ( மரணச் சடங்கு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 8 தவணை – 3 தேர்ச்சி 1-2-3 பஸ் தரிப்பு நிலையம்





இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 9 தவணை – 2 தேர்ச்சி 1.1.2 வனத்தில் சுதந்திரமாக நடமாடும் பிராணிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் – 9 தவணை – 2 தேர்ச்சி 1-1-5 கதைக்கு கவிதைக்கு ஆக்கம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 9 தவணை - 2 தேர்ச்சி 1-1-6 வள்ளம் வரும் வரை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் – 9 தவணை – 3 தேர்ச்சி 1-1-3 படகில் ஆறறைக் கடத்தல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 10 தவணை - 2 தேர்ச்சி 1-1-4 கிராமிய விளையாட்டு ஒன்றில் உள்ளங்கவர்ந்த சந்தர்ப்பம் (கிட்டிப்புள்ளு விளையாட்டு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 10 தவனை – 2 தேர்ச்சி 1 – 2 - 2 செழிப்பான பூமியும் உழவரின் கரங்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 10 தவனை – 3 தேர்ச்சி 1-1-3 பிரியமான சம்பாசனை






இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 10 தவணை = 3 தேர்ச்சி 1-1-5 சனப் நெருக்கமான வீதி








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 11 தவணை – 1 தேர்ச்சி 1-1-1 கிராமிய மக்கள் வாழ்க்கை




இரேகையில் சித்திரம்



பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 11 தவணை – 1 தேர்ச்சி 1-1-3 பரபரப்பான சந்தர்ப்பம் (சந்தைக் காட்சி)





பா.இரமணாகரன்

இரேகையில் சித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தரம் 11 தவணை – 1 தேர்ச்சி 1 – 1 1 – 5 தாய்ப்பாசம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 11 தவணை – 2 வரட்சி ஏற்பட்ட போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 11 தவணை –3 தேர்ச்சி - 1- 1- 7 முகூர்த்த வேளையில் தாலி கட்டுதல்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 11 தவணை – 3 தேர்ச்சி 1-1-8 அகதிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுபோக்கு








பா.இரமணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வீட்டுக்கு வந்த உறவினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோரின் அறிவுரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கூட்டம் வரைவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பொருட்கூட்டம் வரைவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிறுவர் அட்டைப்படம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுத்தள அலங்காரம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன பறவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இலகு அலங்காரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலைக்கரை அலங்காரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய நிகழ்வுகள்






இரேகையில் சித்திரம்

பா.இரமணாகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஒரு படத்தை தேவைக்கேற்ப பெரிதாக வரைய பெட்டி அடித்து பெரிதாக்குதல்




படம் - 1



படம் - 2




படம் - 3






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சின்னம்) இலட்சினை வரைவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வீதி விபத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதிசுற்றும் தாள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்த்தட்டுப்பாடும் சமூகமும்




உழவுத்தொழில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி

## நூலாசிரியர் திரு.பாலசுந்தரம் இரமணாகரன்

மனித்துவ ஆக்கத்தின் சக்திக்கு உயிர் கொடுப்பது சித்திரக்கலை. உலகளாவிய ரீதியில் கல்வியியல் துறையில் சித்திர பாடம் முதன்மை பெறுகின்றது. பாடசாலை மாணவர்கள் தமது ஆளுமையை விருத்தியாக்க சித்திரக் கலையில் மிகுந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றனர். இதற்கு சித்திரபாட ஆசிரியரின் ஆளுமை முதன்மைக் காரணியாகவுள்ளது. ஆசிரியரின் ஆளுமை மாணவர்களின் ஆளுமையில் விருத்தியை ஏற்படுத்தும். இவ்வாறான ஆளுமையைக் கொண்டவர் சித்திரபாட ஆசிரியர் திரு.பாலசுந்தரம் இரமணாகரன் அவர்கள்.

மாணவர்கள் தமது உணர்ச்சிகளையும் .விருப்பங்களையும் யார் நிறைவேற்றுகின்றார்களோ அவர்களுடன் ஏற்படும் உறவைத் தமதாக்கிக் கொள்கின்றார்கள். இவ்வாறு மாணவர்களின் உணர்வுகளுடன் சங்கமமாகும் ஆற்றலுள்ள இந் நூலாசிரியர் எனது மாணவர் பாலசுந்தரம் இரமணாகரன் அவர்களின் இந் நூலாக்க முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2003 - 2005 காலப்பகுதியில் சித்திர பாட ஆசிரியராக பயிற்சி பெற்று யா / வட்டு இந்துக்கல்லூரி, யா / மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம், சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை, யா / காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நல்லாசிரியராகக் கடமையாற்றியவர். பல செயற்றிட்டங்களும், ஆய்வுகளையும், ஆக்கங்களையும் வெளியிட்டு சித்திர பாடத்துறையில் மிகுந்த தேர்ச்சியும், நிபுணத்துவ ஆற்றலும் உடையவர்

"சித்திரக்கலை வரைதல் பயிற்சி தரம் 6 தொடக்கம் தரம் 11" என்ற இந்நூல் இடைநிலைப்பாடசாலை சித்திரபாட கலைத்திட்டத்தில் மாணவர்களுக்கான தேர்ச்சிகளை விருத்தியாக்கும் பயில்வுகளைக் கொண்டுள்ளது. மாணவர்கள் சுயமாக சித்திர பாடத்தைக் கற்பதற்கான வழிகாட்டல்கள் இந்நூலில் அடங்கியிருப்பது அடுத்த சிறப்பாகக் காணப்படுகின்றது. மாணவர்களின் கற்றலுக்கான ஆர்வத்தைத் தூண்டும் பாடப்பயிற்சிகள் எளிமையாக மாணவர் விரும்பும் பயிற்சிகளும் நூலில் அடங்கியுள்ளன. சிறந்த சித்திர பாட ஆக்கத்திறன் உத்திகளுடன் இந்நூலை இந்நூலை ஆக்கிய திரு.பாலசுந்தரம் இரமணாகரன் மேலும் பல நூல்களை வெளியிட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி பா.தனபாலன்,**
நிபுணத்துவ ஆலோசகர் - சமய விழுமிய பிரிவு,
கல்வியமைச்சு, பத்தரமுல்ல.

9 789554 353909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org